பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ தோற்றம் : 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

மலர் : 20] சென்னை : கார்த்திகை 5 (20—11—72) திங்கள் ... ஊர் : கார்த்திகை 6 (21—11—72) செவ்வாய் [இதழ் : 130

சிங்கத்துக்குப் பதில் புலி— இந்தியாவின் தேசிய விலங்கு

புதுடில்லி, நவ. 20—

தற்போது இந்தியாவின் தேசிய விலங்கு புலியாகவுள்ளது; கடந்த சுமார் பத்தாண்டுக் காலமாகத் தேசிய விலங்கு என்ற சிறப்புக்குரியதாக இருந்துவந்த சிங்கம் இப்போது நீக்கப்பட்டுவிட்டது.

"புலி இந்தியாவின் பல ... யில் — எட்டு ... களிலும் — காணப்படு...; ஆனால் சிங்கம் ... ஒரே மாநிலத்தில்தான் (குசராத்) காணப்படுகிறது; எனவேதான் இந்த மாற்றம்" என்று அறிவிக்கப்படுகிறது.

நந்தனருக்கு நினைவுச் சின்னம்

பிறந்த ஊரைச் சிறந்த கிராமமாக்க முடிவு

ரூ. 64,000 செலவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டம்

தஞ்சாவூர், நவ. 18—

நந்தனர் பிறந்த கிராமத்தை ஒரு மாதிரிக கிராமமாக உருவாக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

மேலநல்லூர் என்னும் அந்தக் கிராமம் தஞ்சை மாவட்டம் சீர்காழி அருகே உள்ளது.

அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென 27 வீடுகள் கட்டப்படும். ஒவ்வொரு வீடும் ரூ. 2,000 செலவில் கட்டப்படும்.

மேலும், இணைப்புச் சாலைகளுக்காக அரசு ரூ. 3 000 செலவிடும். அந்தக் கிராமத்தில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைக்கவும், காலத்துக்கேற்ப மாற்றியமைக்கவும் ரூ 7 000 செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தை உருவாக்கக் காரணமாயிருந்த தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் தலைவரான குன்றக்குடி அடிகளாருடன, தாழ்த்தப்பட்டோர் நலத்தை அதிகாரிகள் நவம்பர் 16-ஆம் தேதியன்று அந்தக் கிராமத்தைப் பார்வையிட்டனர்.

"நந்தனாரைப் பற்றிய வரலாறும் — தொடர்புடைய தகவல்களும் பொறிக்கப்பட்டும், இந்தக் கிராமத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையிலும் நந்தனர் நினைவுச் சின்னம் ஒன்று இந்தக் கிராமத்தில் அமைக்கப்படும்; நினைவுச் சின்னத்தில் பொறிக்கப்படும் எழுத்துக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கும்" என்று குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி. அவர்கள் தெரிவித்தார்.

(ஏற்கனவே தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னமாக தில்லையாடியில் மாதிரி கிராமம் உருவாக்கித் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழக அரசு வசதியான குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பது நினைவுகூரத்தக்கது)

மருத்துவத் துறையில் அரிய சாதனை

யாரோஸ்லாவ் நவ. 20—

விபத்து ஒன்றில் ஒரு சிறுவனின் வலது கால் தனியே துண்டாகி விட்டது.

சில டாக்டர்கள் அதை மீண்டும் அந்தப் பையனின் தொடையுடன் இணைத்துத் தைத்துவிட்டனர்; இப்போது அந்தப் பையன் தேறி வருகிறான்.

இந்த அற்புத மருத்துவச் சாதனையை இரஷ்யாவிலுள்ள யரோஸ்லாவ் நகரில், சில இரஷ்ய டாக்டர்கள் சாதித்திருக்கின்றனர்.

முத்துராமலிங்கருக்குச் சிலையமைப்பு

முதலமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 20—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமைப்பது பற்றி எழுதப்பட்ட கோரிக்கை பற்றிச் செய்தியாளர்கள், முதலமைச்சர் கலைஞரிடம் கேட்டனர்; அதற்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறியதாவது:—

"ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி — அங்கே தேவரின் சிலையை வைக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றனர்,

"அந்த இடத்தை அளிக்க முடியுமா என்பது பரிசீலிக்கப்படும்; இல்லாவிட்டால் வேறு இடம்— நிச்சயமாகத் தகுதியான இடம் வழங்கப்படும்."

சிங்கமும் சிறுநரிகளும்!

சென்னை, நவ. 20—

"இந்தியாவின் வரலாறு எழுதப்படுகின்ற நேரத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு ஓரிரு பக்கங்கள் அல்ல — ஓர் அத்தியாயமே எழுதவேண்டிய அளவிற்கு வரலாற்றில் இடம் பெற்றவராவார்!

ஒரு தலைவனை இழந்துவிடுகிறோமென்றால் — அவரால் உருவாக்கப்பட்ட இயக்கம் வாழ்ந்தால்தான், அவர், 'தலைவர்' என்று ஒப்புக் கொள்ளப்படுகிறவர் ஆவார்; 'இவர் பெரிய தலைவர் — அவருக்குப் பிறகு அந்த இயக்கமே இருக்காது' என்று சொன்னால், அவர் தலைவரல்லர்; தனக்குப் பிறகு, தான் கட்டிக்காத்த கொள்கைகளை — இலட்சியங்களை — உருவாக்கிய எண்ணங்களை நடத்திச் செல்லக்கூடிய — தனக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கக் கூடிய தலைவர்களை எந்த ஒரு தலைவன் உருவாக்குகிறானோ அவன் தான் சிறந்த தலைவன்; அப்படிப்பட்ட தலைமையை உருவாக்கியிருப்பவர்கள்தான் தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஆவார்கள்; பார்வர்டு பிளாக் கட்சியைப் பொறுத்தவரை மறைந்த தேவர் அவர்களும் ஆவார்கள்!

"முத்துராமலிங்கத் தேவர் யார் மீதாவது குற்றஞ்சாட்டினால், அதை, இலட்சக்கணக்கான மக்களுக்கு நேராகக் கூறுவார்; ஒளிந்து — மறைந்து — நெளிந்து — வளைந்து பேசமாட்டார்; நெஞ்சைத் தொட்டு மார்தட்டிச் சொல்வார்; 'வழக்கு மன்றத்திற்கு வருகிறீர்களா' என்று கேட்பார்; 'அதைப்போல இன்றைக்கு இருப்பவர்கள் யாராவது கேட்கிறார்களா' என்று பெருமாள் அவர்கள் இங்கே கேட்டார்.

"பெருமாள் அவர்கள் இப்படிக் கேட்டதற்காக உள்ளபடியே வருத்தப்படுகிறேன்; 'சிங்கம் கர்ஜித்ததைப்போல சிறு நரிகள் கர்ஜிக்குமா' என்று பெருமாள் கேட்கிறாரே — இது நியாயமான கேள்விதானா?

"சிங்கம் — அது, கர்ஜித்தது; 'சந்திக்கத் தயாரா — எந்த இடத்திலும் சந்திக்கத் தயார்' என்று சொன்னார் தேவர்; ஆனால், அந்தக் காலத்திலும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் சொல்லாதவர்கள், இன்று முன்னேற்றக் கழக அரசை — மன்னிக்க வேண்டும் — பிறருடுத்தப்பட்ட மக்களால் நடத்தப்படுகின்ற அரசை, 'கவிழ்ப்போம் — அழிப்போம்' என்கிறார்கள்!"

—முதலமைச்சர் கலைஞர்

(முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவில்)

இரும்புக் குண்டும் மர்மப் பெட்டியும்

சென்னை, நவ. 20—

"ஓர் ஊரில் — தனி நபர் ஒருவர், அந்த ஊரையே எதிர்த்துக் கொண்டிருந்தார்; ஒரு நாள், பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டு ஒன்றை ஒரு கிண்ணத்திலிருந்த தண்ணீரில் போட்டு — அந்தத் தண்ணீர் சிறிது நேரத்தில் வற்றிவிடக் கண்டார்; உடனே அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

"அதன்படி, 'ஊர்க் குளம் வற்றிவிட்டால் நம்மை எதிர்க்கும் அந்த ஊரே தண்ணீர்ப் பஞ்சத்தால் அழிந்துவிடும்' என்று கருதி — இரவோடு இரவாக ஒரு பெரிய இரும்புத் துண்டைப் பழுக்கக் காய்ச்சி யாருக்கும் தெரியாமல் குளத்துக்குள் எறிந்துவிட்டு ஊருக்கு வெளியே போய் உட்கார்ந்து கொண்டார்; அந்த ஊரிலிருந்து வருபவர்களிடமெல்லாம், 'ஊரில் ஏதாவது விசேடமுண்டா' என்று கேட்டுக்கொண்டே இருந்தார்; 'ஒன்றும் இல்லையே' என்றார்கள்; 'குளத்தைப் பற்றி ஏதாவது பேசுகிறார்களா?' என்றார்; 'இல்லையே' என்று பதில் வந்தது; 'ஏதாவது பேச வேண்டுமே' என்று கவலையோடு விசாரித்தார்; 'கிடையாதே' என்றார்கள் வந்தவர்கள!

"அதுபோன்று, ஒரு பெட்டியைக் கொண்டுபோய்க் குடியரசுத் தலைவரிடம் கொடுத்துவிட்டுவந்து, 'இந்த ஆட்சியே கவிழ்ந்துவிடும்' என்ற நினைப்பிலிருப்பவர்கள், அங்கிருந்து வருகிறவர்களையெல்லாம் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்; 'ஏதாவது விசேடமுண்டா' என்கிறார்கள்; 'இல்லையே' என்று பதில் வருகிறது; 'நீதி விசாரணை பற்றிப் பேசுகிறார்களா' என்கிறார்கள்; 'கிடையாதே' என்று பதில் வருகிறது; 'இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்யமாட்டார்களா' என்று கவலையோடு கேட்கிறார்கள்.

"அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் — 1976-ம் ஆண்டுவரை மட்டுமல்ல — 1986-ம் ஆண்டுவரையிலும்கூட இந்த அரசுதான் இருக்கும்; கலைஞர்தான் முதலமைச்சராக இருப்பார்."

—ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ.

(முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவில்)

முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்

சென்னையில் சிறப்புமிகு விழா — முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர்

சென்னை, நவ. 20—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 65-வது பிறந்த நாள் விழா — பசும்பொன் நண்பர்கள் கழகச் சார்பில் — சென்னையில் என். கே. டி. கலா மண்டபத்தில் நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேவரின் உருவப் படம் மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் கலைஞர், அமைச்சர்கள் மன்னை ப. நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தார்.

விழாவிற்கு, திரு. சின்னப்பா தலைமைதாங்கினார்.

திரு. பி. கே. முத்துராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

திரு. ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக), மணலி கந்தசாமி (வலது கம்யூனிஸ்டு), திருமதி டி. என். அனந்தநாயகி (இ. காங்கிரசு), இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி. ஆகியோர் ... சொற்பொழிவாற்றினர்.

திரு. முத்துசாமி நன்றி கூறினார்.

மரண தண்டனை — சில குற்றங்களுக்கு ஆயுள் தண்டனையாகக் குறையும்

புதுடில்லி, நவ. 20—

இதுவரையில் மரண தண்டனை வழங்கப்பட்டு வந்த சில குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை அளிக்கக் கூடிய முறையில் இந்தியன் பினல் கோடு சட்டத்தைத் திருத்த மத்திய அமைச்சரான முடிவு செய்திருக்கிறது.

ஆனால், அதே சமயம், முன்பே திட்டமிட்டு செய்யப்பட்ட கொலைகள் — படுபாதகமான முறையில் செய்யப்பட்ட படுகொலைகள் போன்றவைகளுக்குத் தொடர்ந்து மரண தண்டனை அளிக்கப்பட்டு வரும்.

பூம்புகார் கல்லூரியில் புதிய பட்டப் படிப்பு

இந்தியாவிலேயே முதன்முதலாகத் துவக்கம்

தஞ்சாவூர், நவ. 20—

"காவிரிப்பட்டணம் பூம்புகாரிலுள்ள இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில, சமயத்திலும் தத்துவத்திலும் பி. எஸ். எல். (பேச்லா ஆப் சேக்ரெட் லேர்னிங்—அதாவது அறநெறிக் கல்வி) பட்டப் படிப்பு தொடங்கப்படும்"

என்று மேற்கண்ட கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவர் குன்றக்குடி அடிகளார் இங்கு நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தப் பட்டப் படிப்பு, மற்ற பட்டப் படிப்புகளைப் போல 3 ஆண்டுகாலப் படிப்பாக இருக்கும்; அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இது தொடங்கப்படும்.

இந்தப் படிப்பில் தேறுகிறவர்களுக்குத் தமிழ்நாட்டிலுள்ள கோவில்களில் நிர்வாக அதிகாரி பதவிகள் அளிக்கப்படும்.

இந்தியாவிலேயே இப்படிப்பட்ட பட்டப் படிப்பு தொடங்கப்படுவது இதுவே முதல் முறையாக இருக்கும்."

'விபரீதபுரி'யின் ஏடு விஷத்தைக் கக்குகிறது -- 'பொதுவான கருத்து' என்று கூறிப் பொதுமக்களை மதியிலிகளாக்க முனைகிறது -- 'அரசியல் கதவு' அமைக்கப்பட்டதால் அராஜகம் கொல்லைப்புறம் வழியாக நுழைய முயற்சிக்கிறது

நன்றி மறந்தோர் -- நல்லதை உணராதோர் செயல் பற்றிக் கவலை வேண்டாம்

[✶]

கடமையைச் செய்வோம் -- கழக ஒளி விளக்கை அணையாமல் காப்போம் --- கழகத் தலைவர் கலைஞர் கனிவுரை

"அசூயைக்காரர்கள் -- சூத்திரக்காரர்கள் -- நன்றி மறந்தோர் -- நல்லதை உணராதோர் மத்தியில்தான் நாம் -- நமது கழகத்தின் ஒளி விளக்கை அணையாமல் காத்திட அண்ணாவின் கல்லறைமுன் உறுதி எடுத்துக்கொண்டு பணிபுரிந்து வருகிறோம்!

"நமது தேர்தல் சின்னம் உதய சூரியன்; 'அந்தச் சூரியன்தனைப் பார்த்து ஓநான் சிரிக்கிறதே' என்று கவலைப்படாமல் கடமையைச் செய்வதுபோல், நாம் நமது கடமையைச் செய்வோம்! எரிச்சல்காரர்களுக்கு அவர்தம் எரிச்சலே முடிவில் எரிச்சல் தீர்க்கும் மருந்தாகட்டும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'எரிச்சல் மருந்து' என்ற தலைப்பில் உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருக்கிறார்; அம்மடல் வருமாறு :—

உடன்பிறப்பே -- ஒரு பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தைப் பார்த்தாயா? --

1. அரசுக்கும் மக்களுக்கும் நடக்கும் பலப்பரீட்சை.
2. ஒன்றுக் கணக்குக் காட்டுங்கள் -- இன்றேல் -- பதவியிலிருந்து விலகுங்கள், என்கிறார்கள் மக்கள்.
3. கணக்கையும் காட்டமாட்டோம் -- பதவியையும் விடமாட்டோம் -- சட்டசபையில் எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

இதுதான் அந்த ஏடு சுட்டிக்காட்டும் கருத்து விளக்கங்கள்.

'மக்கள்' என்றால் யார் -- என்று அந்த ஏடு விளக்கம் தரவில்லை; தெருவில் ஓடும் கார்களை நிறுத்தி அதன் கண்ணாடிகளை உடைப்பவர்கள் -- பேருந்து வண்டிகளைக் கொளுத்தும் பத்தும் பேர் -- கூட்டங்களில் கல்வீசிக் கலவரம் செய்யும் 50 பேர் -- இவர்கள்தான் அந்த இதழின் அகராதிப்படி மக்கள்; அதாவது, காலிகளும் -- கூலிகளும் -- சமுதாய விரோதிகளும், 'மக்கள்' என்ற மகிமை பொருந்திய பட்டியலில் வருகிறார்கள்!

கணக்குக் காட்டுங்கள் என்கிறார்களாம் மக்கள் -- கதைக்கிறது அந்தக் கருப்புச் சந்தை ஏடு!

கணக்கை, 1967 முதல் சட்டசபையில் காட்டிவருகின்ற அமைச்சர்களைப் பார்த்து, 'அதிலே எது குற்றம்? எது குறை' என்று கூற வகையற்றவர்கள் -- தங்கள் கணக்கைக் காட்ட வேண்டுமென்று பல நோட்டீசுகள் வந்த பிறகும் காட்ட மறுப்பவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்; அதனை விமர்சிக்க விரும்பாத ஏடு, கணக்குக் காட்டும் நம்மைப் பார்த்து எரிச்சலைக் கக்குகிறது!

முதலில், அந்த ஏடு, தனது கணக்கைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கத் தயாராக இருக்கிறதா? 'நாங்கள் வருமான வரி இலாகாவுக்கு காட்டுகிறோம்' என்பார்கள் -- அந்த ஏடு நடத்துவோர்; மகிழ்ச்சி; அதைப்போலத்தான், அமைச்சர்களும் தங்கள் கணக்கை வருமான வரி இலாகாவுக்கும் காட்டுகிறார்கள் -- சட்டசபையிலும் ஆண்டுதோறும் வைக்கிறார்கள்!

விபரீதபுரியின் ஏடு -- விஷத்தைக் கக்குவதற்கும் ஒரு எல்லை கிடையாதா?

'கணக்கையும் காட்டமாட்டோம் -- பதவியையும் விடமாட்டோம்' என்று யார் சொன்னது? எவர் சொன்னது? எப்போது சொன்னார்கள்?

"இதோ -- சட்டசபையில் கணக்கையும் காட்டுகிறோம்; மக்கள் அளித்த தீர்ப்பின்படி 1971 முதல் பதவியையும் தொடருகிறோம்" என்றுதான் கூறுகிறோம்!

அர்த்தால் நடந்துவிட்டதாம் -- அதனால் ஆட்சியை விட்டுப் போக வேண்டுமாம் -- அந்த ஏடு எழுதுகிறது அப்படி!

அந்த ஏட்டை வாங்கி விற்கும் விற்பனையாளர்களின் கடைகளில் ஒருநாள் அர்த்தால் நடந்துவிட்டால் அந்த ஏடு, தன் காரியாலயத்தை இழுத்து மூடத் தயாராக இருக்கிறதா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது; இப்படிக் கேட்டால்தான் சில மூளைகளுக்கும் புரியும்போல் இருக்கிறது!

தேவிகுளம் -- பீர்மேடு தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் (காங்கிரசு தவிர) அர்த்தால் நடைபெற்றது; அந்தப் பகுதிகளை இழக்கக் காரணமாக இருந்த காங்கிரசு அரசு, அப்போது பதவி விலகிடவில்லை; அதற்குப் பிறகும் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பதவியிலேதான் இருந்தது!

அந்த வெற்றிகரமான அர்த்தால் சுதந்தரத் தமிழகத்தில்தான் நடைபெற்றது; 'சுதந்தரத்திற்குப் பிறகு இன்று நடந்ததுபோல் ஒரு அர்த்தால் நடந்ததில்லை' என்று அந்த ஏடு எழுதுவது, 'தேவிகுளம் -- பீர்மேடு கிளர்ச்சி'யை மறந்ததினால் ஏற்பட்ட மனக் குழப்பம்!

ஆனால் ஒன்று -- தன்னை மறந்து ஒரு உண்மையை அந்த 'எரிச்சல் ஏடு' ஒப்புக்கொண்டு, அதன் தலையங்கத்தில் கீழ்க்கண்ட வாசகங்களை எழுதியிருக்கிறது :—

"**மனப்பூர்வமான ஒரு அரசியல் கதவடைப்பு சுதந்தர சகாப்தத்துக்குப்பின் இப்போதுதான் நடந்திருக்கிறது என்பதே போதுவான கருத்து**"

இது, அதன் தலையங்கத்தில் ஒரு பகுதி; 'பொதுவான கருத்து' என்று கூறி பொதுமக்களை மதியிலிகளாக்குவானேன்?

நடந்தது அரசியல் கதவடைப்பாம் -- அந்த ஏடுதான் சொல்கிறது அப்படி!

ஆமாம் -- அரசியல் கதவடைப்புத்தான்! அரசியல் கதவு அமைக்கப்பட்டால்தான், அராஜகம் கொல்லைப்புறப் புழக்கடை வழியாக நுழைய முயற்சிக்கிறது!

அரசியல் கதவைத் திறந்து -- அராஜகத்தை விரட்டத்தான் நாம் முயலுகிறோம்.

எரிச்சலில், 'என்ன எழுதுகிறோம்' என்றுகூடத் தெரியவில்லை அந்த ஏட்டுக்கு!

இன்னொரு வரி கவனித்தாயா?--'சுதந்திர சகாப்தத்திற்குப்பின்' என்று குறிப்பிடுகிறது; இந்தியா இப்போது சுதந்தர சகாப்தத்தில்தான் இருக்கிறது என்பதை அது மறந்து விட்டது."

புரட்சித் தலைவருக்கு ஒரு புதிய யோசனை

"மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு; தமிழக மக்களுக்கு விரோதமான இந்த அமைச்சரவை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று மக்கள் சொல்கிறார்கள்."

—புதுக் கட்சித் தலைவர்

'மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு' என்றுதான் அண்ணா சொன்னார்; எம். ஜி. இராமச்சந்திரன் தீர்ப்புதான் மக்கள் தீர்ப்பு' என்று சொல்லவில்லையே!

மக்கள் 1967-லும், 1971-லும் அளித்த தீர்ப்புதான், தமிழகத்தில் கழக ஆட்சி தொடர்ந்து நடைபெறுவது!

அடுத்து 1976-லும் மக்கள் தீர்ப்பளிக்கத்தான் போகிறார்கள்; அந்தத் தீர்ப்பு எப்படி இருக்கிறதோ -- அதன்படி ஆட்சியும் அமையும்; அதற்குள் ஏன் புரட்சியார் துடிக்கிறார்?

ஐந்தாண்டுக்கு ஒரு முறை மக்கள் தீர்ப்பைப் பெற்று ஆட்சி அமைக்க வேண்டுமென்பது அரசியல் சட்டத்தின் விதி; பொதுத்தேர்தல் நடத்துவதன் மூலமே மக்கள் தீர்ப்பைப் பெற முடியும்: இதுதான் மக்களாட்சி முறையில் மக்கள் தீர்ப்பைக் கணித்தறியும் அளவுகோல்; இதைவிட வேறு எந்த அளவுகோலைக் கொண்டு மக்கள் தீர்ப்பை அறிந்தார் புரட்சித் தலைவர்? 'அர்த்தால் நடத்தியதன் மூலம் மக்கள் தீர்ப்பை அறிந்து கொண்டுவிட்டேன்' என்கிறார் அவர்!

அர்த்தால் உண்மையிலேயே வெற்றிகரமாக நடைபெற்றதா என்பது ஒருபுறமிருக்கட்டும்; அர்த்தால் எந்த முறையில் நடத்தப்பட்டது -- எத்தனை சதவிகிதம் ... மனப்பூர்வமாக அர்த்தாலைக் கடைபிடித்தார்கள் -- எத்தனை சதவிகிதத்தினர், மிரட்டலுக்கும், உருட்டலுக்கும் பயந்து அர்த்தாலை அனுசரித்தனர் என்பதையும் விட்டுவிடுவோம்.

'அர்த்தால்'தான் ஓர் நிலையான ஆட்சியை மாற்றுவதற்கான சனநாயக வழியா? அப்படியென்றால், தமிழ்நாட்டில் நினைத்தபோதெல்லாம் ஆட்சியை மாற்றிக் காட்டியிருக்க முடியுமே -- இதற்குத் தேர்தல் எதற்கு? தேர்தல் கமிஷன் என்ற சுயேச்சை அதிகாரம் படைத்த ஓர் அமைப்பு ஏன்? 'தலைமைத் தேர்தல் கமிஷனர்' என்று ஒருவர் ஏன்?

அந்த எல்லாப் பொறுப்புக்களையும் எம். ஜி. இராமச்சந்திரனிடமே ஒப்படைத்துவிடலாமே! தேர்தலின் பேரால் செலவாகும் வரிப் பணமும் -- வேட்பாளர்களின் தேர்தல் செலவும் மிச்சமாகுமே!

அர்த்தால் என்றால், 15-ந் தேதி நடந்ததே அதுவா அர்த்தால்? மக்கள் அவரவரும் தாங்களாகவே தங்கள் எதிர்ப்பைக் காட்ட உள்ளபூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் கடையடைப்பு -- வேலைநிறுத்தம் செய்ய முன்வர வேண்டும்; தப்பித் தவறிகூட ஒரு கடை திறந்திராமல் -- ஓர் அலுவலகத்திலும் பணி நடைபெறாமல் இருக்க வேண்டும்; வீதிகளெல்லாம் வெறிச்சோடி இருக்க வேண்டாமா?

செய்து காட்டினார்களே தமிழ்நாட்டு மக்கள் முன்பு! தேவிகுளம் -- பீர்மேடு போராட்டத்தின்போது -- 1956 பிப்ரவரி 20-ந் தேதி நடந்ததே ஓர் அர்த்தால் -- புரட்சித் தலைவருக்கு நினைவிருக்கிறதா? 1965 இந்தி எதிர்ப்பின்போது நடந்ததே ஓர் அர்த்தால் -- அதாவது நினைவிருக்கிறதா? அர்த்தால் என்றால் அதுவல்லவா அர்த்தால்?

அப்படிப்பட்ட அர்த்தால்களையெல்லாம் பார்த்துங்கூட, அன்று இருந்த ஆட்சி இராஜினாமா செய்துவிடவில்லையே!

"அர்த்தால் வெற்றிகரமாக நடந்துவிட்டது; காமராசரே -- பக்தவத்சலமே -- நீங்கள் ஆட்சியை விட்டு ஓடுங்கள்; நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று, அன்று அறிஞர் அண்ணாவோ, தோழமைக் கட்சிகளின் தலைவர்களோ சொன்னார்களா?

நேற்று நடந்ததைப்போல் அர்த்தால் நடக்க வேண்டுமென்றால், அதற்கு எம். ஜி. இராமச்சந்திரன்தான் வேண்டும் -- யார் நினைத்தாலும் செய்துகாட்டிவிட முடியுமே!

ஊருக்கு ஊர் நான்கு காலிகள் சேர்த்துக்கொண்டு, 'கடையை மூடுகிறாயா -- இல்லையா' என்று கேட்டால் போதுமே -- தங்கள் உடைமைக்கு ஆபத்து வந்துவிடப்போகிறது என்று அஞ்சாதவர் யார்தான் இருப்பார்கள்?

"கடையை அடைப்பதற்கும் பதில், ஒவ்வொருவரும் தங்கள் வீட்டை அடைத்துக் கொண்டு அவரவர் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் -- சொல்லிப் பார்க்கட்டுமே இந்தப் புரட்சி வீரர்! இப்படிச் சொல்லி, 'வீடு அடைப்பு' நூற்றுக்கு நூறுகூட அல்ல -- ஓர் ஐம்பது சதவிகிதமாவது வெற்றிகரமாக நடைபெறுகிறதா என்று பார்ப்போம்; அப்படி நடைபெறுமானால், அதைக்கூட மக்களின் தீர்ப்பு என்று கொள்ளலாம்.

புதுக் கட்சித் தலைவர், தமது அடுத்த போராட்டத் திட்டமாக இதைக் கொள்வார் என்று நம்பலாமா? இதைச் செய்து காட்டுவாரானால், அவர் உண்மையான புரட்சித் தலைவர்தான்!

அப்போது பார்க்கலாம் -- மக்களாட்சித் தத்துவ மேதையின் முயற்சிக்கு மக்கள் என்ன தீர்ப்பு அளிக்கிறார்கள் என்பதை!

—'சேனு'

பாகிஸ்தான் போர்க் கைதிகள்

சுரங்கப் பாதை அமைத்து தப்பியோடிய விவரங்கள்

மக்களவையில் தகவல்

புதுடில்லி, நவ. 17—

"பாகிஸ்தான் போர்க்கைதிகளை அடைத்து வைத்திருக்கும் பதேகர் முகாமில் கள்ளத்தனமாகப் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதை அமைத்துக்கொண்டு அதன் வழியாக 6 பாகிஸ்தான் அதிகாரிகள் தப்பி ஓடிவிட்டனர்"

என்று, பாதுகாப்பு அமைச்சர் ஜகஜீவன்ராம்,மக்களவையில் தெரிவித்தார்; இதன் தொடர்பில் அவர் கூறியதாவது :—

"இந்தச் சுரங்கப் பாதை 47.17 மீட்டர் நீளமும் 2.60 மீட்டர் ஆழமும் இருந்தது.

பதேகர் முகாமிலிருந்து பருகாபாத்தை நோக்கி இந்தச் சுரங்கப் பாதையை அவர்கள் வெட்டினர்; அதன்பின் 6 பாகிஸ்தான் அதிகாரிகள் தப்பி ஓடிவிட்டனர்.

நம் நாட்டில் இதர இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் போர்க் கைதிகள் முகாமிலிருந்தும் இதே மாதிரி சில கைதிகள் தப்பி ஓடினர்.

கடந்த 6 மாதங்களில் மொத்தம் 29 பாகிஸ்தான் போர்க் கைதிகள் இவ்வாறு தப்பி ஓடினர்; இவர்களில் 17 பேர் பின்னர் மீண்டும் பிடிபட்டனர்.

கடந்த சனவரி மாதம் முதற்கொண்டு இதுவரையில் மொத்தம் 19 பாகிஸ்தான் போர்க் கைதிகள் இவ்வாறு தப்பி ஓடினர்; இவர்களில் இருவர் நேபாளத்தை அடைந்தனர்; அங்கு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

பாகிஸ்தான் போர்க் கைதிகள் முகாம்களில் கடந்த 6 மாதங்களில் கைதிகளுக்கும் -- காவலர்களுக்குமிடையே இரு முறை மோதல்கள் நடந்தன; மத்தியப் பிரதேச முகாமில் ஒரு முறையும் உத்தரப்பிரதேச முகாமில் ஒரு முறையும் இப்படி நடந்தது."

சென்னை நகரில் 182 அஞ்சல் நிலையங்கள்

சென்னை, நவ. 20—

சென்னை நகரத்தில் மொத்தம் 182 அஞ்சல்நிலையங்கள் உள்ளன.

சுமார் முக்கால் கிலோ மீட்டருக்கு ஒரு அஞ்சலகம் வீதம் உள்ளது.

மக்கள் தொகை ரீதியில் 30,723 பேருக்கு ஒரு அஞ்சலகம் வீதம் இருக்கிறது.

நாளொன்றுக்கு 12,27,220 அஞ்சல்கள் பட்டுவாடா ஆகின்றன; இவை பதிவு செய்யாதவை.

மனோகரனுக்கு ஏன் இந்த மன முறிவு?

'செல்லப் பிள்ளை'யாக வாழ்ந்தவர் காட்டும் நன்றி உணர்வா இது?

துணைப் பொதுச்செயலாளர் க. இராசாராம் வெளியிடும் தகவல்கள்

சென்னை, நவ. 18—

'மனோகரனைத் தன் உடன்பிறவாச் சகோதரராகவே கலைஞர் கருதி வந்தார்; தொலைபேசியிலோ -- தொலைக்காட்சியிலோ மக்களுக்கோ எப்போதுமே அகப்படாத அவரைப் பற்றி யார் என்ன சொன்னாலும், அதுபற்றிக் கலைஞர் எந்தவித நடவடிக்கையும் எடுத்தது இல்லை.

"இவ்வளவு சலுகைகளையும் அனுபவித்தவர் செல்லப் பிள்ளை மனோகரன்; இவருக்கு ஏன் மன முறிவு ஏற்பட்டது என்றே எனக்குப் புரியவில்லை; ஒருவேளை, மதுரை மாநாட்டில் சொல்லிய நிலைக்கு அவரே ஆளாகிவிட்டாரோ என்னவோ"

என்று, கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு. க. இராசாராம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்; அவர், தம் அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது :—

"நாஞ்சில் கி. மனோகரன் திடீரென ஒரு முடிவெடுத்துக் கழகத்திலிருந்து விலகிப் போய்விட்டதாக நாட்டிற்கு அறிவித்துள்ளார்.

பொதுக்குழு நடைபெற்ற நாளன்று காலை அவர், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் வீட்டுக்கு வந்திருந்தார்; அப்போது சட்டமன்ற மேலவை உறுப்பினர் தோழர் கோ. சி. மணி அவர்கள், 'திரு. மனோகரன் எந்த அளவில் உள்ளார் என்பதைத் தெரிவிக்க வேண்டும்; மனோகரனைப் போன்றவர்கள் தடுமாறுவது நல்லதல்ல; எனக்கு விளக்கம் வேண்டும்' என்று உறுதியாகப் பல கேள்விகளைக் கேட்டார்.

அப்படிக் கேட்டதற்குக் காரணம், மனோகரன், கழகத்துக்கும் -- எம். ஜி. ஆருக்கும் இடையில் தூது போவதாகக் கூறிக் காலங் கடத்தியதாலே ஆகும்; ஆகவே அவருடைய கேள்விகள், உணர்ச்சியால் உந்தப்பட்டு வெளிவந்தவைகளாகும்.

என்றாலும் உடனடியாகக் கலைஞர் அவர்கள், தனது நீண்ட நாளைய நண்பரும் -- கழகத்தின் உறுதி குலையாத் தொண்டருமான கோ. சி. மணி அவர்களுக்குப் மற்றும் தாட்சண்யமும் காட்டாமல், 'போ -- வெளியே' என்ற அளவுக்கு வார்த்தைகளைக் கூறிக் கடிந்து கொண்டார்; அந்த வார்த்தைகளைக் கேட்டுப் பொறுத நிலையில் திரு. மணி நிலைகுலைந்து, 'நான், நண்பர் மனோகரனை விளக்கம்தான் கேட்கிறேன்; அதற்குக்கூட எனக்கு உரிமை இல்லையா' என்று வினவி, மனோகரனிடம் அப்படிக் கேட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அந்த நேரத்தில்தான் மனோகரன் தேம்பித் தேம்பி அழுது, 'நான் என்றும் கழகத்தை விட்டுப் போகமாட்டேன்' என்று கூறினார்; கலைஞரும்—நாவலரும்—கோவைச் செழியனும் மற்றவர்களும் ஆறுதல் கூறி அவரைப் பொதுக்குழுவுக்கு அழைத்து வந்தார்கள்.

அவர் சமாதானத்துக்குப் போன போதுகூட, முதல் நாள் தனது நண்பர் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போய்விட்டார்; நானும் -- அமைச்சர் ப. உ. சண்முகமும் அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'ஓய்வு எடுக்க இதுவா நேரம்' எனக் கேட்டோம்; அது, அவரை அறிந்தவர்களுக்குத்தான் தெரியும்.

பொதுக்குழுவிற்கும் அவர் வந்து, 'என்றைக்கும் நான் கழகத்தின் பக்கம்தான்' என்று உறுதியாகக் கூறிவிட்டுத்தான் போனார்.

நீண்ட நாட்களாக டெல்லியில் இருந்துவிட்டதனாலும் -- அறிஞர் அண்ணா அடிக்கடி டெல்லி வந்ததைப்போல -- டெல்லிக் காற்றை அதிகமாகப் ... விட்டதனாலும், அவருக்கு, 'கழகத்தை விட்டுப் போக வேண்டும்' என்ற எண்ணம் தோன்றிற்று என்றே கருதுகிறேன்.

கழகம் -- அதிலும் குறிப்பாகக் கலைஞர் அவர்கள், திரு. மனோகரனுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்புத் தந்துவந்தவர் என்பது கழகத்தில் உள்ள தலைவர்கள் அனைவருக்குமே தெரியும்.

1967-ம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்குப் பேராசிரியர் அன்பழகன் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பேராசிரியர் அவர்களைத் தலைவராகவும் -- என்னைத் துணைத் தலைவராகவும் -- அன்புச் செழியனைத் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்வது நலம் -- என அறிஞர் அண்ணா விரும்பினார்கள்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருடன் நான், டெல்லிக்கு இரயிலில் சென்றேன்; மனோகரன் விமானம் மூலம் டெல்லிக்கு வந்தார்; வந்ததும், இரா. செழியனுடன் பேசினார்; நாடாளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவர் பொறுப்பைத்தான் ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்பதைப் பற்றித் திரு. ஏ. கே. கோபாலன் எம்.பி. (கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்) -- அனந்தன் நம்பியார் போன்றவர்களிடமும் திரு. மனோகரன் விவாதித்தார்.

பின்னர் என்னிடம், கட்சித் துணைத் தலைவர் பொறுப்பை விட்டுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்; அதன்படியே நான் விட்டுக் கொடுத்ததுடன், கட்சித் தலைவர் பொறுப்புக்கும் பேராசிரியர் அன்பழகன் அவர்களைத் திரு. மனோகரனை முன்மொழியுமாறு சொன்னேன்; அதன்படியே அவரும் முன்மொழிந்தார்; அப்போதே 'திரு. மனோகரன் கழகத்தை விட்டுப் போய்விடுவார்' என்று நாடு எதிர்பார்த்தது; எங்கள் முயற்சியால் அது நடைபெறவில்லை.

1971 தேர்தல் முடிந்ததும், மீண்டும் கட்சித் தலைவர் தேர்தல் வந்தது; மனோகரனைத் தவிர மற்ற அனைவரும், 'திரு. செழியன் அவர்களைத் தலைவராக்க வேண்டும்' என்றனர்.

காலையில் தொடங்கிய கூட்டம் இரவு வரையில் நடைபெற்றது; கடைசியில் கழகத் தலைவர் அனைவரையும் சமாதானம் செய்து, 'திரு. மனோகரனே ஓர் ஆண்டுக்குத் தலைவராக இருக்கட்டும்' என்று முடிவு எடுத்தார்கள்; அவர் செய்தது சற்று சர்வாதிகாரம் என்று நாங்கள் எல்லாம் உரிமையுடன் அப்போது சலித்துக்கொண்டோம்; மனோகரனுக்காக அவர் அன்று 'சர்வாதிகாரி'யாக நடந்து கொண்டார்; இதற்காகக் கலைஞருக்கு மனோகரன் காட்டியுள்ள நன்றியைப் பார்க்கும் போது என்னைப் போன்றவர்கள் பெரும் அளவுக்கு வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

ஓராண்டு முடிந்ததும் மீண்டும் அதே பிரச்சினை வந்தது; 'இரண்டு அவைகளுக்கும் மொத்தமாக ஒரு தலைவரும் -- ஒவ்வொரு அவைக்கும் ஒரு தலைவரும் இருக்கட்டும்' என்ற எண்ணம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மேலோங்கி இருந்தது; அப்போதும், கழகத் தலைவர் கலைஞர், திரு மனோகரன் எதனை விரும்புகிறார் என்பதை அறிந்தே முடிவு எடுத்தார்; கலைஞரின் முடிவு தனக்குச் சாதகமானதாகஇருக்கவே திருப்தியடைந்து மதுரை மாநாட்டிலும் கலந்து கொண்டார்; அங்கு கலைஞருடன் அளவளாவி மகிழ்ந்தார்; உடனிருந்த நான், இதனை நன்கு அறிவேன்.

கலைஞர் அவர்கள், மனோகரன் பால் காட்டிய அன்புக்கு எல்லையே இல்லை; அந்த அன்பின் ஈரம் உலராத தன்மையில்தான், மதுரை மாநாட்டில், 'கழகத்தை விட்டுப் போகிறவர்கள் மூளையே பழுது பார்க்கப்பட வேண்டும்' என்கின்ற அளவுக்குப் பேசினார்; தற்போது எப்படித்தான் அவருக்குக் கட்சிமாற மனம் துணிந்ததோ தெரியவில்லை!

அவருக்குக் கலைஞர் காட்டிய சலுகைகள் அளவற்றவை; அண்மையில்கூட, 'திரு. மனோகரனின் உடல்நலம் கெட்டுவிட்டது' என்றதும் -- 'அவருக்குச் சிறந்த டாக்டர் தேவை என்று கருதி -- சென்னையிலிருந்து சிறந்த டாக்டர் ஒருவருக்கு டெல்லி விமானத்தில் இடம் பிடித்துக் கொடுப்பதுவரை ஏற்பாடு செய்து -- மணிக்குமணி தொலைபேசியில் நிலைமையை விசாரித்துக்கொண்டு இருந்தவர் நமது கலைஞர்!"

கிளர்ச்சிகளால் ஆட்சியை அகற்ற முடியாது

'ஆட்சிக் கவிழ்ப்பு வீரர்களுக்கு' கோவை 'நவ இந்தியா' இடித்துரை

"ஒரு கட்சி ஆட்சிக்கு மக்கள் ஆதரவு உண்டா இல்லையா என்பதை நிர்ணயிப்பது தேர்தல்கள்; 'அவற்றின் மூலம் பதவிக்கு வந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பலத்தை வைத்தே நடப்பு நிலவரங்களை நிர்ணயிக்க வேண்டும் -- கிளர்ச்சி ஆர்ப்பாட்டம் ஆகியவற்றின் மூலம் அல்ல' என்பது சனநாயக அரசியல் முறையாகும்.

தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசு அதிகாரத்திலிருந்து இறங்க வேண்டுமானால், அதற்குச் சட்டமன்றத்தில் உள்ள 'மெஜாரிட்டி' பலம் இல்லாது போகவேண்டும்; அத்தகைய நிலை ஏற்படாதிருப்பதால், அதை வெளியேற வேண்டும் என வற்புறுத்திக் கிளர்ச்சி செய்து, சட்டமும் -- ஒழுங்கும் கெடச் செய்வது முறையாகாது என்று சொல்லப்படுகின்றது.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் ஆக்கபூர்வமான முறையில் மக்களோடு தொடர்பு கொண்டு -- அவர்களுடைய ஆதரவைப் பெற்றுத் தேர்தல் களத்தில் வெற்றி -- தோல்விகளைக் காண முயல்வதுதான் உகந்த வழியாக இருக்கும்; உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் கிளர்ச்சி முறையானது உசிதமானதாக இருக்காது"

என்று, கோவையிலிருந்து வெளிவரும் காங்கிரசு சார்பு நாளிதழான 'நவ இந்தியா'வில் 'எது வழி?' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தோட்டத் தொழிலாளருக்கு வீடு கட்ட உதவி

புதுடில்லி, நவ 20—

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் இதுவரையில் 104 வீடுகளைக் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

இந்த வீடுகளைக் கட்டுவதற்காக ரூ 1,60,000 கடனாகவும், ரூ. 25,000 உதவித் தொகையாகவும் வழங்கப்படும்.

மத்திய அரசு இதுவரையில் இத்திட்டத்திற்காக கடனாக ரூ. 1,28,000-மும் உதவித்தொகையாக ரூ 96,000-மும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறது.

நாடாளுமன்ற மேலவையில் இத்தகவல் தரப்பட்டிருக்கிறது.

கட்டாய இந்தியை எதிர்த்துப் போராடிக் காங்கிரசின் அடக்குமுறைக் கொடுமைகளுக்குப் பலியானோர் குடும்பங்களுக்கு நிதியுதவி

இந்திப்போரில் இறந்தோர் குடும்பங்கள் கோரிக்கை -- கழக அரசு ஏற்கிறது

53 குடும்பங்களுக்கு ரூ. 1,06,000 உதவித் தொகை

சென்னை நவ. 20-

1965-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் காங்கிரசு ஆட்சியாளர்களின் அடக்குமுறைக் கொடுமைகளுக்குள்ளாகி உயிர்துறந்த 53 தியாகச் செம்மல்களின் குடும்பத்தினருக்கு – குடும்பம் ஒன்றுக்கு ரூ 2 000 வீதம் மொத்தம் ரூ. 1 06 000 உதவித் தொகையாக வழங்கத் தி. மு. கழக அரசு முன்வந்திருக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போரில் இறந்துபோனவர்களின் குடும்பத்தினர் சிலர் அண்மையில் செய்துகொண்ட முறையீட்டின் அடிப்படையில் – அது பரிசீலனை செய்யப்பட்டு இதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன் தொடர்பான முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பு பற்றி தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்று கூறுவதாவது :—

"1965-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு -- கிளர்ச்சி ஆகியவைகளின்போது துப்பாக்கிப் பிரயோகத்திலும், சிறையிலும் மாண்ட தியாகிகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 2,000 வீதம் மொத்தம் ரூ. 1,06,000 வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1965 ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக்குளித்து மாண்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு மாதம் ரூ 100 வீதம் மானியம் வழங்க சில மாதங்களுக்கு முன்பு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நிதியுதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

இவர்களின் குடும்பங்களுக்கு அப்போதிருந்த அரசு எந்தவித உதவியும் அளித்திடவில்லை என்பதால், இவ்வுதவியை வழங்க இன்றைய அரசு முன்வந்திருக்கிறது.

சிறை சென்றவர்களுக்கு உதவி

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைசென்றவர்களுக்கு உதவி செய்வது மற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது."

இதோ ஒரு சாம்பிள்

ஓட்டுக் காங்கிரசு தலைவரின்-புளுகு அம்பலம்

ஈரோடு, நவ. 16—

ஈரோடு நகர தி. மு. க. செயலாளர் ப. ச. விசுவநாதன் அறிப்பதாவது:—

"ஓட்டுக்காங்கிரசுத் தலைவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், அக்டோபர் 19-ந் தேதி ஈரோட்டில் எம்.ஜி.ஆர். கட்சிப் பொதுக் கூட்டம் நடைபெற்றதாகவும் -- பொதுக்கூட்டத்தில் கலவரம் விளைவிக்கப்பட்டதாகவும் கூறியதாகத் 'தினமணி' (15-11-72) இதழில் செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால், அந்தத் தேதியில் ஈரோட்டில் எம்.ஜி.ஆர்.கட்சிப் பொதுக்கூட்டத்தில் எதுவும் நடைபெறவில்லை; கூட்டமே நடைபெறாத போது கூட்டத்தில் கலவரம் எப்படி நடந்திருக்கும்?

அவர் தருகிற ஒவ்வொரு செய்தியும் இதுபோல்தான் இருக்கும் என்பதற்கு இது ஒரு சான்று.

இனிமேலாவது ஓட்டுக் காங்கிரசுத் தலைவர் விபரமறியாமல் இப்படிப்பட்ட தவறான செய்திகளை கொடுக்காமல் இருக்கும்படித் தெரிவித்துக் கொள்கிறேன்."

'கழகத்தின் வலிவு எப்போதும்போல் இருந்து வருகிறது'

'குழப்ப நிலைகள் விரைவில் மறையும்'

'கழக அரசு உறுதிய[illegible]'

பொதுச்செயலாளர் நாவலர் விளக்கம்

திருச்சி, நவ. 20—

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிவு எப்போதும் போலவே இருந்துவருகிறது.

"இப்போது எம்.ஜி.ஆர். அவர்களால் எழுப்பப்பட்டிருக்கின்ற பிரச்சினையையொட்டிப் பொதுமக்களிடத்தில் ஏற்பட்டிருக்கின்ற குழப்ப நிலைகள் இன்னும் சில நாட்களில் மறையும் என்பது திண்ணம்.

"அந்த உறுதியுடன் திராவிட முன்னேற்றக் கழகமும் — கழக அரசும் எப்போதும்போல் பணியாற்றிவருகிறது"

என்று பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சனநாயகப் பண்புக்கு எடுத்துக்காட்டாகும்

செய்தியாளர்களின் கேள்விகட்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது :—

"குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியலைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, முதலமைச்சர் கலைஞருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்; அதற்கான விளக்கங்கள், முதலமைச்சர் மூலம் தலைமையமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படும்.

"குற்றச்சாட்டுப் பட்டியலைத் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பிவைத்து விளக்கம் கேட்டிருப்பது, சனநாயக முறைக்கும் — பண்புக்கும் தலைமையமைச்சர் எவ்வளவு மதிப்பு அளிக்கிறார் என்பதைக் காட்டுவதாகும்."

தெளிவுமிக்க சூழ்நிலை

மேயர் தேர்தல் முடிவு பற்றிக் கருத்தறிவிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"மாநகராட்சி மன்றத்தில் தி. மு. கழகத்தின் வலிவை முறியடிக்க எம்.ஜி.ஆரின் புதிய கட்சி உட்பட மற்ற எதிர்க் கட்சிகள் எவ்வளவோ முயன்று பார்த்தும் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை என்பதைச் சூழ்நிலை தெளிவாகக் காட்டியிருக்கிறது.

"மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்து அமைந்துள்ள இதே வலிவான நிலைமைதான் சட்டமன்றத்தைப் பொறுத்தும் எப்போதும்போல் அமைந்திருக்கிறது."

சிவகாசியில் கழகப் பொதுக்கூட்டம்

5—11—72-ல், சிவகாசி நகர் தி.மு.க. சார்பில் மாரியம்மன் கோவில் திடலில் தோழர் வ. சு. குருசாமி தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை தமிழரசி எம்.சி. கழகப் பொதுக்குழுவின் முடிவுகள் பற்றியும், கழக இலட்சியங்கள் பற்றியும், மாநில சுயாட்சி பற்றியும் விளக்கவுரையாற்றினர்.

மற்றும் இரா. சங்கீத திலகம், எஸ். செல்வராசு, எஸ்.எம். பொன்னுச்சாமி, கா.மு. மதார், மு. பழனிசாமி, சி. பெ. குருசாமி, ஏ. எஸ். கனி, எம். எஸ். தங்கமணி, க. மாரியப்பன், எஸ். ஏ. ரசாக் எம்.சி., ஏ. துரைக்கண்ணன், தாடி அம்தாலிம் எம்.சி., எஸ். பி. மணியம், வே. கருணாகரன் ஆகியோர் கழக ஆட்சியின் சாதனை பற்றியும், ஒட்டுக் காங்கிரசின் தில்லுமுல்லுகள் பற்றியும் உரையாற்றினர்.

குடியேற்றம் வட்ட தி. மு .க. பிரதிநிதிகள் கூட்டம்

குடியேற்றம் வட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், வட்ட அவைத் தலைவர் திரு. இராமகிருஷ்ணன் தலைமையில் 11-11-72 அன்று நடைபெற்றது.

திரு. இராஜாங்கம் எம்.பி. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தோம்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ., துரைமுருகன் எம்.எல்.ஏ., ஆர். பி. உலகநம்பி எம்.பி., ஏ. கே. துலாசாமி எம்.எல்.ஏ., கிருஷ்ணன் எம்.எல்.ஏ., பொதுக்குழு உறுப்பினர் மு. கோதண்டன், வட்டச் செயலாளர் பி. கே. முனுசாமி ஆகியோர், பொதுக்குழு — செயற்குழு முடிவுகளை ஆதரித்தும், கழக வளர்ச்சி குறித்தும், கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினர்.

கோவை—நெல்லை வானொலி நிலையங்கள்

முழு அளவில் இயங்கும் நிலையங்களாக ஆகும்

புதுடில்லி, நவ. 20—

அனைத்திந்திய வானொலியின் 12 துணை நிலையங்களை நடப்புத் திட்டக் காலத்தில் முழு அளவு நிலையங்களாக உயர்த்த செய்தி—ஒலிபரப்பு அமைச்சகம் முடிவு செய்திருக்கிறது.

அடுத்த திட்டக் காலத்தில் மற்றும் 8 நிலையங்கள் முழு அளவு நிலையங்களாக உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது சென்னை — திருச்சி ஆகிய இரண்டு இடங்களில் வானொலி நிலையங்கள் உள்ளன.

கோவை — நெல்லை ஆகிய ஊர்களில், 'வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்' மட்டுமே இருக்கின்றன; அதாவது, இந்த நிலையங்கள் சொந்தத்தில் நிகழ்ச்சிகள் தயாரித்து ஒலிபரப்புவதில்லை; திருச்சி நிலையம், ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும் நிலையங்களாக இவைகள் இயங்கி வருகின்றன.

இனி இந்த இரண்டு நிலையங்களும் சொந்தத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பக்கூடிய முழு அளவு வானொலி நிலையங்களாக மாற்றப்படும்.

நான்காவது ஐந்தா[illegible]ண்டுத் திட்டத்தில், கோவை வா[illegible]னொலி நிலையம் அமைக்கப்படும். [illegible]5-வது ஐந்தாண்டுத் திட்டத்தி[illegible] திருநெல்வேலி வானொலி நிலை[illegible] ஏற்படுத்தப்படும்.

இந்தத் தகவல்களை, தகவல் — ஒலிபரப்பு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் வெளியிட்டார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

22—11—72

சென்னை முதல் வட்டம்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு புதுமனைக்குப்பம் நடுநிலைப் பள்ளி அருகில்; தலைவர்: கே. இராசு; பேசுவோர்: அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, சிட்டிபாபு எம்.பி., மு. வேதாசலம் எம். எல். ஏ., பொன் சொக்கலிங்கம் எம். எல். ஏ., துரைமுருகன் எம். எல். ஏ., பி.ஏ.என். இராசரத்தினம், கே. துரைராசு எம்.சி., இரா. மு. மனோகரன் எம்.சி., மு. நடராசன், பூ. நாகலிங்கம், சே. அரசு, பி.ஜி. கபாலி மற்றும் பலர்.

அண்ணா முதியோர் கல்வி நிலையத் திறப்புவிழா

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை — சூலமங்கலம் கிளையின் சார்பில் அறிஞர் அண்ணா (அரிசன) முதியோர் கல்விக் கழகத் திறப்புவிழா 22—11—72 மாலை 7 மணிக்கு சேலம் பழைய சூலமங்கலம் சுப்பிரமணியர் கோவில் முன்பு திரு ஆர். சண்முகவேல் தலைமையிலும் — திரு. ஏ.ஆர். கணேசன் முன்னிலையிலும் நடைபெறும்; குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி., க. செயராமன் எம்.எல்.ஏ., பி. நடேசன், அமானுல்லாகான், அ. மாரியப்பன் எம்.சி., ப. சிவமயம், பி. பரமசிவம் ஆகியோர் பேசுவர்.

கல்வித் துறைப் பணிக்குழு பரிந்துரை

ஆராய நிபுணர் குழு

திருச்சி, நவ. 20—

"தமிழ்நாடு திட்டக் குழு, கல்வித் துறைச் சம்பந்தமாக ஒரு பணிக்குழுவை நியமித்தது; அந்தப் பணிக்குழு சில பரிந்துரைகளைத் தெரிவித்திருக்கிறது; அவற்றை எந்த அளவுக்குச் செயல்படுத்தலாம் என்பது பற்றி யோசனை கூற ஒரு நிபுணர் குழுவை தமிழ்நாடு அரசு விரைவில நியமிக்கும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு நிருபர்களிடம் கூறினார்.

"பணிக் குழுவின் சிபாரிசுகள் பற்றிப் பல்கலைக் கழகங்களின் கருத்துக்களும் கோரப்பட்டுள்ளன" என்றும் அவர் சொன்னார்.

மின்கழக ஊழியர்கட்குப் புதிய சலுகைகள்

பல்லவ மண்டல மாநாட்டில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

அமைச்சர்கள் என். வி. நடராசன் — எஸ். இராமச்சந்திரன்—ஓ.பி. இராமன் பங்கேற்பு

சென்னை நவ. 20—

தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்குக் கல்விக் கடன்கள் வழங்கப்படும்; இந்தக் கடனுக்கு வட்டி கிடையாது; இந்தக் கடன் திட்டத்துக்காக மின்சார வாரியம் ரூ. 10 இலட்சம் ஒதுக்கும்; விரைவில் திட்ட விவரங்கள் தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

இப்போது வேலையில் இருக்கும்போது ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக ரூ. 100 அளிக்கப்படுகிறது; இது ரூ. 200 ஆக உயர்த்தப்படும்.

இப்போது சைக்கிள் அலவன்சாக ரூ. 4 தரப்படுகிறது; இது ரூ. 6 ஆக உயர்த்தப்படும்.

தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

இந்த அறிவிப்பை, எழும்பூரிலுள்ள பெரியார் திடலில் நடைபெற்ற தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பல்லவ மண்டல மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்.

மாநாட்டிற்கு, தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநிலத் துணைத் தலைவர் கோவிந்தசாமி தலைமைதாங்கினர்.

தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் கொடியை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் ஏற்றிவைத்தார்; 'கோரிக்கைகளுக்குத் தீர்வு காண நேரடிப் பேச்சுவார்த்தையே சிறந்தது' என்று குறிப்பிட்டார்.

வரவேற்புக் குழுத் தலைவர் பி. மாணிக்கராசன் அனைவரையும் வரவேற்று—பல்வேறு கோரிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

அமைச்சர் ஓ. பி. இராமன், மாநாட்டு மலரை வெளியிட்டுப் பேசினர்.

போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் பேசுகையில், தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. பேசுகையில், பல்வேறு கோரிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

திரு. சி. சிட்டிபாபு எம்.பி. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. எம். இராஜா — நா. வீராசாமி — எம். ஆர். கண்ணன் — மா. வெ. நாராயணசாமி — சென்னை மேயர் ஆர். ஆறுமுகம் ஆகியோரும் பேசினர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கட்குத் தொழிலாளர்கள் சார்பில் 'லஸ்தர்' மின் விளக்கு ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது; அதனை அவர், பெரியார் திடல் கலை அரங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர்.

மாநாட்டையொட்டி, காலையில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மாநாட்டில் 40 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரூ. 10.71 கோடி மதிப்புள்ள கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

புதுடில்லி, நவ. 18—

"நடப்பு ஆண்டில மே மாதத்திலிருந்து செப்டம்பர் வரை சுங்க அதிகாரிகள் ரூ. 10.71 கோடி பெறுமானமுள்ள கடத்தல பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்"

என்று, வருவாய் — செலவினத் துறை அமைச்சர் கே. ஆர். கணேஷ், மக்களவையில் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருள்களில் ரூ. 3.73 கோடி பெறுமானமுள்ள நைலான் போன்ற செயற்கை நூல் ஆடைகள் — ரூ. 1.91 கோடி பெறுமானமுள்ள கைக்கடிகாரங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

அபாண்ட பழி

வி. ஜானகிராமன் மறுப்பு

சென்னை, நவ. 17—

சென்னை 37-வது வட்ட தி.மு.க. செயலாளர் வி. ஜானகிராமன் அறிவிப்பதாவது :—

"நான் 37-வது வட்ட தி. மு. க. செயலாளர் என்ற முறையில், கடந்த 15—11—72 அன்று முழுதும் எனது வட்டத்திலேயே இருந்து கழகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன.

இந்த நிலையில், என்மீது அபாண்டமான பழியைச் சுமத்தி, அன்றையத் தினம் மீனம்பாக்கம் விமான நிலயத்தில் என்னைப் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதனைப் பத்திரிகை மூலமாக அறிந்தேன்; அது முற்றிலும் பொய்யாகும்; அன்றையத் தினம் நான் மீனம்பாக்கம் விமான நிலயத்திற்கே போகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

அந்தமான் தீவுக்கு வ. உ. சி. பெயர்

மக்களவையில் சிட்டிபாபு வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 20—

அந்தமான் — நிக்கோபார் தீவுகளுக்குப் புதிய பெயர் சூட்ட மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது; இது பற்றி நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் சி. சிட்டிபாபு பேசியதாவது :—

"சுதந்தரப் போராட்டத்தின் போது தமிழ்நாட்டின் பங்கு பற்றி இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தில் பிறந்த வ. உ. சிதம்பரனார், வெள்ளையனை எதிர்த்துக் கப்பல் ஓட்டியவர்; இப்போதுகூட அவரை, 'கப்பலோட்டிய தமிழன்' என்று பெருமையுடன் அழைக்கிறோம்; அந்தமான் தீவுக்கு வந்த முதல் சுதந்தரக் கப்பல் இதுதான்.

வடநாட்டுச் சுதந்தரத் தலைவர்களுக்கு இருக்கும் பெயரும் விளம்பரமும் தென்னகத் தலைவர்களுக்கு இல்லை.

தில்லையாடி வள்ளியம்மை— கொடிகாத்த திருப்பூர் குமரன்— பாரதியார்—வ. உ. சிதம்பரனார் — திரு. வி. க.—வாஞ்சி அய்யர்— சேலம் விஜயராகவாச்சாரியார்— இராஜாஜி—சுப்பிரமணிய சிவா— தந்தை பெரியார் — அறிஞர் அண்ணா ஆகியோர் சுதந்தரக் குரல் கொடுத்த தலைவர்களில் சிலர்.

அந்தமான் தீவில் வசிப்பவர்கள் பெரும்பாலும் தமிழர்கள்; எனவே, இந்தத் தீவுக்கு வ. உ. சி. பெயரையோ அல்லது மேற்குறிப்பிட்ட தலைவர்களில் ஒருவருடைய பெயரையோ சூட்டினால், தமிழ் மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் [illegible]